Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் செவ்வாய்க்கிழமை, ஜூலை 27, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 13

## ஜெயலலிதா காலத்திலிருந்து அதிமுகவுடன் கூட்டணி வைத்த பாமக தொடர்ந்து தோல்வியை சந்தித்தது வரலாறு ஒலக்கூரில் சிறுபான்மையினர் நல அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் பேச்சு

திண்டிவனம், ஜூலை 27 2021: பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க.,வுடன் கூட்டணி வைத்த காலங்களில் தோல்வியை தழுவியது தான் வரலாறு-அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் பா.ம.க. பற்றி பேசியுள்ள நிலையில் திண்டிவனத்தில் அமைச்சர் செஞ்சி. மஸ்தான் பேச்சு.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் அ.தி.மு.க., அ.ம.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., பா.ஜ.க உள்ளிட்ட மாற்று கட்சியினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தி.மு.க., வில் இணையும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேசிய தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசும்போது,

கடந்த ஜெயலலிதா ஆட்சி காலத்தில் இருந்து பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க.,வுடன் கூட்டணி சேர்ந்த காலங்களில் எல்லாம் தோல்வியைத் தழுவியதை சுட்டிக்காட்டி பேசினார்.

டாக்டர் ராமதாஸின் போராட்டத்திற்கு மதிப்பளித்து அந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு கலைஞர் ஆட்சி காலத்தில் 20 சதவீத விழுக்காடு இடஒதுக்கீடு பெற்றுத்தந்ததன் காரணமாக அந்த சமூகங்களில் அதிக அளவில் மருத்துவர்கள் , பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் ஆபிஸர்கள் என வர முடிந்தது கலைஞருடைய திட்டத்தால் தான். ஆனால் தற்பொழுது இட ஒதுக்கீடு என்ற நாடகத்தை எடப்பாடி பழனிச்சாமி நடத்தியதன் மூலம் அந்த சமூக மக்களிடம் பெரிய குழப்பத்தை ஏற்படுத்தி சமூக நீதி என்ற மிகப்பெரிய போராட்டத்தை கொச்சைப்படுத்தியுள்ளார்கள் என்றார். மேலும் தி.மு.க., வுடன் கூட்டணி வைத்ததன் விளைவு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுத் தந்தது திமுக. ஆனால் ஜெயலலிதாவுடன் கைகோர்த்து 7 நாடாளுமன்ற இடங்களைப் பெற்று போட்டியிட்டு 7 இடங்களிலும் தோல்வியைத் தழுவின. அதுமட்டுமல்லாமல் எடப்பாடி பழனிச்சாமி உடன் கூட்டணி வைத்து 7 இடங்களிலும் வெற்றி வாய்ப்பை பா.ம.க. இழந்தது. மேலும் இடஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் 22 குடும்பங்களுக்கு பணக்கொடை வழங்கியது மட்டுமல்லாது, அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்தது கலைஞர் ஆட்சியில் தான் என்று பெருமிதம் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல் அந்த குடும்பத்தில் அரசு வேலைவாய்ப்பு வழங்கி, இன்றைக்கு அந்த குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை என்ற நிலையை உருவாக்கியவர் கலைஞர் கருணாநிதி. இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.ரமணன், தேன்மொழி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் பங்கை சொக்கலிங்கம், ஒலக்கூர் ராஜாராம், நல்லூர் கண்ணன், வழக்கறிஞர் அணி கே.சி. ஆதித்தியன், தொண்டரணி டி.ஜி. ராஜசக்தி, மாணவரணி எம்.டி பாபு, ஒய்.முஸ்தபா, பொறியாளர் அணி செந்தில் முருகன், மாவட்ட பிரதிநிதிகள் வி.எஸ். முருகன், ஆர்.ரவிச்சந்திரன், ஜெரோம், தீர்த்தமலை, மருதமலை, அசோக்குமார் உள்ளிட்ட திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## விவசாயிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி திடீர் போராட்டம் டிராக்டரை அவரே ஓட்டினார்

புதுடெல்லி ஜூலை 27 2021: வேளாண்மை தொடர்பாக மத்திய அரசு 3 சட்டங்களை கொண்டு வந்தது. இவை விவசாயிகளின் நலன்களுக்கு எதிராக இருப்பதாக கூறி பல்வேறு விவசாய சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டன.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ந் தேதியில் இருந்து விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அன்றைய தினத்தில் இருந்து டெல்லியில் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த போராட்டம் 11-வது மாதமாக நீடித்து வருகிறது.

இந்தநிலையில் டெல்லி நகருக்குள் போராட்டம் நடத்த விவசாயிகள் அனுமதி கேட்டனர். இதையடுத்து அவர்களுக்கு டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது.

அங்கு விவசாயிகள் திரண்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் போராட்டத்துக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நேரடியாக சென்று ஆதரவு தெரிவித்தனர்.

இதேபோல பல்வேறு கட்சித் தலைவர்களும், போராட்டக்காரர்களை சந்தித்து ஆதரவு தெரிவித்தார்கள்.

இந்த நிலையில் இன்று விவசாயிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டார். பாராளுமன்ற கூட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக புறப்பட்ட ராகுல்காந்தி, விவசாயிகள் போராடும் பகுதிக்கு சென்றார்.

பின்னர் அங்கிருந்து டிராக்டரில் ஏறி பாராளுமன்றத்தை நோக்கி அவர் வந்தார். டிராக்டரை அவரே ஓட்டினார். அருகில் காங்கிரஸ் தலைவர்களும், விவசாய சங்க பிரதிநிதிகளும் இருந்தனர்.

டெல்லி நகருக்குள் ராகுல் காந்தி டிராக்டர் ஓட்டி வந்தது பரபரப்பை ஏற்படுத்தியது. ஏராளமானோர் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர். அவர் டிராக்டரில் வந்ததால் அந்த பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

இதுகுறித்து ராகுல் காந்தி கூறியதாவது:-

விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை வாபஸ் பெற வேண்டும் என்று விவசாயிகள் நீண்ட காலமாக குரல் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய போராட்டத்தை ஒடுக்குவதிலேயே மத்திய அரசு குறிக்கோளாக செயல்படுகிறது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள 3 வேளாண் சட்டங்களும் விவசாயிகளுக்கு எந்த ஒரு நன்மையையும் அளிக்கப் போவது இல்லை. இரண்டு மூன்று பெரிய வியாபாரிகளுக்கு உதவும் வகையிலேயே இந்த சட்டங்கள் உள்ளன.

விவசாயிகளின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. ஆனால் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருப்பதாக அரசு சொல்கிறது. போராட்டக்காரர்களை பயங்கரவாதிகள் போல் பாவிக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு அரசு தயங்குகிறது.

விவசாயிகளின் செய்தியை பாராளுமன்றத்துக்கு கொண்டு செல்வதற்காகவே நான் இன்றைய போராட்டத்தில் பங்கெடுத்து இருக்கிறேன். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.




## என்னை தோற்கடிக்க வேண்டும் என யாரெல்லாம் உள்ளடி வேலைகள் செய்தார்களோ அவர்களின் பட்டியல் என்னிடம் உள்ளது - அமைச்சர் துரைமுருகன்

வேலூர் ஜூலை 27 2021: காட்பாடி சட்டசபை தொகுதி வடக்கு ஒன்றிய தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டம் பொன்னையில் நடந்தது. இந்த கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:-

நான் இந்த தொகுதியில் 71-ம் ஆண்டு முதல் மகத்தான ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்று வருகிறேன். குறிப்பாக மேல்பாடி, பொன்னை பிர்கா தி.மு.கவின் கோட்டை என்பேன்.

ஆனால் இந்தமுறை கிட்டதட்ட 6 ஆயிரம் ஓட்டுகள் பின்தங்கி விட்டோம். காட்பாடி யூனியன் கிராமங்களில் பெரும்பாலான பூத்களில் ஓட்டு எண்ணும்போது நாம் பின் தங்கிதான் இருந்தோம். நமது தி.மு.க. நிர்வாகிகளே எனக்கு உள்ளடி வேலைகள் செய்தார்கள் என்பது எனக்கு தெரியும். அப்படி யாரெல்லாம் உள்ளடி வேலைகள் செய்தார்களோ அவர்களின் பட்டியல் என்னிடம் உள்ளது. என்னை தோற்கடிக்க வேண்டும் என நினைத்தார்கள்.

ஆனால் இறைவன் அருளால் நான் வெற்றி பெற்று விட்டேன். இப்போது அவர்களுக்கும் நான்தான் அமைச்சர்.

மறப்போம்.. மன்னிப்போம்.. என அண்ணாதுரை சொன்னதை நினைத்து வரும் உள்ளாட்சி தேர்தலில் நிர்வாகிகள் இரட்டிப்பாக வேலை செய்ய வேண்டும். தி.மு.க. அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறாவிட்டால் துரோகம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் பாராபட்சமின்றி அடியோடு தி.மு.க.வில் இருந்து அவர்களை உடனடியாக நீக்கிவிடுவேன்.

காட்பாடி யூனியன் என்னை கைவிட்டது என்ற மெத்த வருத்தம் எனக்கு உள்ளது. ஆனாலும் காட்பாடி தாராபடவேட்டிலிருந்து விருதம்பட்டு வரைக்கும் உள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓட்டுகள், ஒருவழியாக உருட்டிபெறட்டி கடைசியில் தபால் ஓட்டுகளில் தான் நாம் வெற்றி பெற்றோம் என சொல்லலாம்.

"நான் சொன்ன வாக்குறுதிகளான பொன்னையில் அரசு கலைக்கல்லூரி மற்றும் பொன்னை ஆற்று மேம்பாலம் கண்டிப்பாக கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்''. இவ்வாறு அவர் பேசினார்.



ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

## அமெரிக்கா குழப்பத்தை ஏற்படுத்தி கியூப அரசை கவிழ்க்க முயற்சி சிபிஎம் மற்றும் தோழமைக் கட்சிகளின் சார்பில் 29.7.2021 அன்று சென்னையில், அமெரிக்க தூதரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை 27, 2021 : இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) - யின் தமிழ்நாடு மாநிலக்குழு கூட்டம் ஜூலை 23, 24, 25 ஆகிய தேதிகளில் மாநில செயற்குழு உறுப்பினர் ஏ. லாசர் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன், மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் டி.கே. ரங்கராஜன், அ. சவுந்தரராசன், உ. வாசுகி, பி. சம்பத் மற்றும் மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ள அரசியல் அறிக்கையை நேற்று (26.7.2021) பத்திரிகையாளர் சந்திப்பின் போது மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் வெளியிட்டார். அவ்வறிக்கை பின்வருமாறு:

ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும்; தமிழகத்தின் உரிமையை மீட்கவும், தமிழக மக்களின் நலன் காக்கவும் : சுயேச்சையாகவும், தோழமைக் கட்சிகளோடு இணைந்தும் தொடர்ந்து போராடுவதென சிபிஐ(எம்) மாநிலக்குழு அறைகூவல்.

நூற்றாண்டு விழா கொண்டாடும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு தன்னுடைய புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

அமெரிக்க தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்.

கியூப புரட்சியை சீர்குலைக்கும் வகையில் அமெரிக்க வல்லரசு தொடர்ந்து சீரழிவு வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. ஐ.நா. பொதுமன்றம் கியூபா மீதான தடையை நீக்க வேண்டுமென பலமுறை தீர்மானம் நிறைவேற்றியும் தடையை நீக்க மறுக்கும் அமெரிக்கா குழப்பத்தை ஏற்படுத்தி கியூப அரசை கவிழ்க்க முயல்கிறது. இதை எதிர்த்து ஒன்றுபட்டு போராடி வரும் கியூப மக்களுக்கு ஆதரவாகவும், அமெரிக்க ஏகாதிபத்திய அரசினை கண்டித்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, சிபிஐ (எம்-எல்) லிபரேசன் ஆகிய கட்சிகளின் சார்பில் 29.7.2021 அன்று சென்னையில், அமெரிக்க தூதரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், தமிழக பொதுவுடமை இயக்கத்தின் பெருமைமிகு அடையாளமாக திகழும் அன்புத் தோழர் என். சங்கரய்யா நூற்றாண்டு பிறந்த நாளை கண்டுள்ளார். அவருக்கு மாநிலக்குழு தன்னுடைய புரட்சிகர நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. அவருடைய பிறந்த நாள் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களால் மட்டுமின்றி, தமிழக மக்கள் அனைவராலும் உற்சாகமாக கொண்டாடப்பட்ட விழாவாக மாறியது. இது அவரது தூய பொதுவாழ்விற்கும், தடம் மாறாமலும் ஒரு கம்யூனிஸ்ட்டாக அவர் வாழ்ந்துள்ள நிறை வாழ்விற்கும், அவரைப்போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்ட வழிநடத்தப்பட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கிடைத்த பெருமையாகும். அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து கட்சிக்கும், தமிழக மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும். அவருடைய பிறந்த நாளில் நேரில் வந்து வாழ்த்து தெரிவித்த, சிபிஐ (எம்) அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சிபிஐ அகில இந்திய பொதுச் செயலாளர் டி. ராஜா ஆகியோருக்கும், அனைத்து கட்சி தலைவர்களுக்கும், அமைப்புகளுக்கும் மாநிலக்குழு தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அதேபோல, இதேகாலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளான மறைந்த தோழர்கள் ஏ. நல்லசிவன், ஆர். உமாநாத், ஏ. பாலசுப்பிரமணியன், கே. முத்தையா ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களையும் கொண்டாட மாநிலக்குழு முடிவு செய்துள்ளது, ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஒன்றிய பாஜக கூட்டணி அரசு தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறது. சொந்த நாட்டு மக்களையே உளவு பார்க்க அந்நிய நாட்டு உளவு அமைப்பை பயன்படுத்தி பெகாசஸ் மென்பொருள் மூலம் வேவு பார்த்த விவகாரம் பெரும் புயலை கிளப்பியுள்ளது. வேளாண் துறையை விவசாயிகளிடமிருந்து பறிக்கும் வேளாண் திருத்தச் சட்டங்களை எதிர்த்து இந்திய விவசாயிகள் 250 நாட்களுக்கும் மேலாக வீரஞ்செறிந்த போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூட ஒன்றிய அரசும், பிரதமரும் தயாராக இல்லை. தேசிய பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட கொடூரமான சட்டங்களை பயன்படுத்தி மனித உரிமை போராளிகளையும், ஜனநாயகத்திற்காக போராடுபவர்களையும் நரேந்திர மோடி அரசு வேட்டையாடி வருகிறது. பிரிட்டிஷ் காலத்தில் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் தேவையா? என உச்சநீதிமன்றமே கேள்வி எழுப்பியுள்ளது. திரைப்படத்துறையை அழிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள "சினிமா ஒளிப்பதிவு சட்டத் திருத்த மசோதா - 2021, சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப சட்டத் திருத்தங்கள் ஆகியவை ஜனநாயகத்தை முடக்கும் நோக்கம் கொண்டவை. இந்தியக் கடல்சார் மீன் வள மசோதாவை கொண்டு வந்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், தொழிலையும் அழிக்க ஒன்றிய பாஜக அரசு உத்தேசித்துள்ளது. வரலாறு காணாத விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவோ, வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவோ ஒன்றிய அரசு கிஞ்சிற்றும் செயல்படவில்லை. இத்தகைய ஒன்றிய நரேந்திர மோடி அரசின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும், மக்கள் நலன் காக்கவும் தொடர்ந்து போராடுவது என மாநிலக்குழு தீர்மானித்துள்ளது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு இந்திய மக்களை பெரும் துயரத்தில் தள்ளியுள்ளது. ஏற்கனவே சில்லரை எரிபொருள் வர்த்தகத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதித்துள்ள மோடி அரசு தற்போது மொத்த விற்பனையையும் அவர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பது, பாதுகாப்புத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவது என்ற முடிவு நாட்டின் சுயசார்பு தூணை தகர்க்கும் செயலாகும். தமிழகத்தில் நீட் தேர்வை திணிப்பது போன்ற ஒன்றிய பாஜக கூட்டணி அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட்டு தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து புதுதில்லியில் 250 நாட்களுக்கும் மேலாக போராடி வரும் இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக, தமிழக விவசாயிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புதுதில்லி சென்று 2021 ஆகஸ்ட் 5ந் தேதி முதல் அவர்களுடன் போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர். போராட்டத்தில் பங்கேற்கும் தமிழக விவசாயிகளுக்கு கட்சியின் மாநிலக்குழு தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம்

நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக அரசுக்கு முடிவு கட்டி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தமிழக வாக்காளர்கள் அமோகமாக வாக்களித்து திமுக தலைமையிலான அரசை பதவியில் அமர்த்தியுள்ளனர். மதவெறி சக்திகளையும், மக்கள் விரோத கொள்கைகளையும் நிராகரித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறுவதை சாத்தியமாக்கிய தமிழக மக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. தமிழகத்தில் கடந்த 10 ஆண்டு காலமாக நடந்து வந்த அதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து நடத்திய போராட்டங்கள், அவற்றின் மூலமாக கட்டமைக்கப்பட்ட பாஜக - அதிமுக எதிர்ப்பு மனநிலை ஆகியவை அதிமுக - பாஜக கூட்டணியை நிராகரித்து, திமுக தலைமையிலான கூட்டணியை அமோக வெற்றி பெறச் செய்ய காரணமாக அமைந்துள்ளது. திமுக அரசு பொறுப்பேற்ற போது கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை உச்சத்தில் இருந்தது. ஆக்சிஜன் பற்றாக்குறையினால் பெரும் மருத்துவ நெருக்கடி ஏற்பட்டது. எனினும், திமுக அரசு இதை சமாளித்து பெருமளவு மக்களை காப்பாற்றியுள்ளது. மூன்றாவது அலை குறித்து மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கும் நிலையில் மருத்துவ கட்டமைப்பை தக்க வைத்து மேம்படுத்த வேண்டுமெனவும், அனைவருக்கும் தட்டுப்பாடின்றி இலவச தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்ய வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு வரவேற்கத்தக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக மக்கள் பெரும் நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இந்த அரசை பதவியில் அமர்த்தியுள்ளனர். மக்களின் நம்பிக்கைகளை பாதுகாக்கும் வகையில் திமுக அரசின் செயல்பாடு எதிர்காலத்திலும் அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழகத்தில் பாசன வசதியும், கட்டமைப்பும் பெருமளவு மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆக்கிரமிப்பு அகற்றல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய மாற்று ஏற்பாடுகளை செய்த பின்னரே மேற்கொள்ள வேண்டும். வேலைவாய்ப்புகளை அதிகரிக்கிற முயற்சிகளை மேற்கொள்ளவும், திரு. ரங்கராஜன் குழு அறிக்கையின் அடிப்படையில் நகர்ப்புற வேலை உறுதி திட்டத்தை செயல்படுத்திடவும் நடவடிக்கைகள் எடுத்திட வேண்டுமென தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

அதிமுக அரசின் ஊழல் - முறைகேடுகள் தமிழகத்தை ஆண்ட அதிமுக அரசு அனைத்து வகைகளிலும் மதவெறி பாஜகவுக்கு அனுசரணையாகவே நடந்து கொண்டது. அனைத்து துறைகளிலும் ஊழலும் - முறைகேடுகளும் நீக்கமற நிறைந்திருந்தது. அனைத்து பணி நியமனங்களும், இடமாறுதலும் பண அடிப்படையிலேயே நடைபெற்றது. ஆட்சியிலிருந்த காலத்திலேயே முதல்வர், துணை முதல்வர், பெரும்பாலான அமைச்சர்கள் மீது ஊழல் புகார்கள் எழுந்து நீதிமன்றம் வரை சென்றது. இந்நிலையில் முந்தைய ஆட்சியில் நடைபெற்ற அனைத்து ஊழல் - முறைகேடுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தி தவறிழைத்தவர்களை தண்டிக்க தமிழக அரசு முன்வர வேண்டும். மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை தடுத்து நிறுத்துவது உள்ளிட்ட தமிழகத்தின் உரிமையை மீட்கவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, பட்டியலின மக்களின் சமூக விடுதலை, பெண்கள்-குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் எதிர்ப்பு, மக்களின் வாழ்வாதார பிரச்சனைகள் உள்ளிட்ட தமிழக மக்களின் நலன் காக்க சுயேச்சையாகவும், தோழமைக் கட்சிகளோடு இணைந்தும் தொடர்ந்து போராடுவது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு முடிவு செய்துள்ளது.

# கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா ராஜினாமா எனது அரசியல் வாழ்க்கை எப்போதும் அக்னிப் பரீட்சையாகவே இருந்தது




பெங்களூரு ஜூலை 27 2021: பாஜகவில் 75 வயதை தாண்டிய தலைவர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்கபடுகிறது. இந்நிலையில் கர்நாடகத்தில் கடந்த 2019-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ந் தேதி எடியூரப்பா 4-வது முறையாக முதல்-மந்திரியாக பதவி ஏற்றார்.

ஆனால் அதில் இருந்து 76 வயதான எடியூரப்பாவுக்கு விலக்கு அளித்து அவருக்கு முதல்-மந்திரி பதவியை பாஜக மேலிடம் வழங்கியது. அப்போதே 2 ஆண்டுகள் முடிந்ததும் முதல்-மந்திரி பதவியை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனையை எடியூரப்பா ஏற்றுக் கொண்டார். அதன்படி எடியூரப்பா முதல்-மந்திரியாக பதவி ஏற்று இன்றுடன் (திங்கட்கிழமை) 2 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்நிலையில், கர்நாடக முதலமைச்சர் பதவியை எடியூரப்பா ராஜினாமா செய்தார்.

பிற்பகலில் ஆளுநரை சந்தித்து ராஜினாமா கடிதத்தை எடியூரப்பா அளித்ததாகவும் அதனை ஆளுநர் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சராக பதவியேற்று 2 ஆண்டுகளை நிறைவு செய்த நிலையில் எடியூரப்பா ராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எடியூரப்பா ராஜினாமாவால் கர்நாடக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தனது ராஜினாமா குறித்து பேசிய எடியூரப்பா, 'அடல் பிகாரி வாஜ்பாய் இந்தியாவின் பிரதமராக இருந்தபோது, என்னை மத்திய மந்திரியாக பொறுப்பேற்கும்படி கூறினார். அப்போதும் கூட நான் கர்நாடகாவிலேயே அரசியல் பயணத்தைத் தொடர்கிறேன் என்று சொல்லிவிட்டேன். எனது அரசியல் வாழ்க்கை எப்போதும் அக்னிப் பரீட்சையாகவே இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகள் கொரோனா தொற்று காலம் என்பதால் மிகச் சவாலாக இருந்தது' என்று தெரிவித்தார்.

# திண்டிவனம் அருகே உரம் மூட்டைகள் ஏற்றிய லாரி பாலத்தின் தடுப்பு கட்டையில் மோதி கவிழ்ந்தது



திண்டிவனம், ஜூலை 27 2021: திண்டிவனம் அருகே உரம் மூட்டைகளை ஏற்றிச் சென்ற லாரி பாலத்தின் தடுப்பு கட்டையில் மோதி விபத்துக்குள்ளானது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அடுத்த சின்ன கவுண்டன் பாளையத்தை சேர்ந்த சின்னசாமி மகன் சுந்தர்ராஜ். இவர் சென்னை, திருவெற்றியூர் இ.ஐ.டி பாரி உர குடோனில் இருந்து சேலத்திற்கு உர மூட்டைகளை லாரியில் ஏற்றி கொண்டு நேற்று இரவு புறப்பட்டார். லாரி விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த செண்டூர் அருகே அதிகாலை 4.30 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது சென்னையிலிருந்து திருச்சி நோக்கி சென்ற ஆம்னி பேருந்து லாரி மேல் உரசுவது போல் முந்தி சென்றதால், பேருந்தின் மேல் மோதாமல் இருக்க டிரைவர் சுந்தர்ராஜ் லாரியை இடது புறம் திருப்பினார். அப்போது சாலையோரம் இருந்த பாலத்தின் தடுப்பு கட்டை மீது லாரியின் டீசல் டேங்க் உரசியது. இதில் நிலைதடுமாறிய லாரி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் லாரி முழுவதுமாக சேதம் அடைந்தது டீசல் டேங்கில் இருந்து டீசல் முழுவதும் வடிந்து முட்புதர்களுக்குள் ஆறாக ஓடியது. லாரி ஓட்டுநர் சிறிய காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். லாரியில் இருந்த உர மூட்டைகள் மாற்று லாரி மூலம் ஏற்றப்பட்டு சேலம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து மயிலம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பூரில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம்




திருப்பூர், ஜூலை 27 2021: மத்திய அரசு கொண்டுவந்துள்ள விவசாயிகளுக்கு எதிரான சட்ட மசோதாவை திரும்பப் பெறக் கோரியும். தமிழகத்தில் ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்ற நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும்.

இந்தியாவில் வரலாறு காணாத பெட்ரோல் டீசல் விலை உயர்வை ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வரச் சொல்லியும் விலையை கட்டுப்படுத்த சொல்லியும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநில துணைத் தலைவர் எஸ் கர்ணன் தேவர் தலைமையில். ரயில் நிலையம் அருகில் உள்ள மாவட்ட தலைமை தபால் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இதில் மத்திய அரசு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மகேஷ்குமார் மாநில குழு உறுப்பினர். ஈஸ்வரன் மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர். டெல்டா

தனசேகர் பல்லடம் ஒன்றிய பொதுச் செயலாளர். ரவி மாவட்ட துணைத் தலைவர். சங்கர் மாநகர துணை செயலாளர். பிரபு மாவட்ட தொழிற்சங்க செயலாளர். மொக்க மாயன் மாவட்ட இளைஞரணி செயலாளர். சின்னத்தம்பி மாவட்ட இளைஞரணி துணை தலைவர். முத்தையா மாவட்ட இளைஞரணி மற்றும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# விழுப்புரத்தில் துவங்கப்பட்ட டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைகழகத்தை மூடுவதற்கு திமுக முயற்சி எடுப்பதாக கூறி திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



விழுப்புரம், ஜூலை 27 2021: விழுப்புரத்தில் நேற்று விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை, எளிய விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் வந்த உயர் கல்வி பயிலுவதற்கு ஏதுவாக விழுப்புரத்தில் துவங்கப்பட்ட டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைகழகத்தை மூடுவதற்கு முயற்சி எடுக்கும் திமுக அரசையும் உயர் கல்வி துறை அமைச்சரையும் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம் கலந்து கொண்டு கண்டன உரையாற்றி பேசியதாவது.

விழுப்புரம் மாவட்டம் 95சதவீதம் கல்வியில் பின் தங்கிய மாவட்டம் தமிழகத்தில் முன்னேறிய மாவட்டம் அம்மா அரசு சிறப்பான 10ஆண்டுகாலத்தில் கல்வி நிலையங்கள் திறக்க பட்டது. பல ஆண்டுகளாக விழுப்புரத்தில் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆண்டுக்கு 7 ஆயிரம் பேர் விண்ணப்பித்தில் 3 ஆயிரம் பேருக்கு இடம் கிடைத்தது. இதனால் தலித், மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை விவசாய மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில முடியாத நிலை இருந்து வந்தது. இதனை மாற்ற இங்கு ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டும் என ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகம் அம்மா அரசு துவக்கியது. மகளிர் கல்வி பெற வேண்டும் என மகளிர் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. ஐந்தாண்டு கல்வியில் கல்லூரி சட்ட கல்லூரி ஏற்படுத்தி தந்தது அம்மா அரசு. இம் மாவட்டத்தில்

பல்கலைக்கழக அமைக்க வேண்டும் 2006 - 11 ஆண்டில் திமுக ஆட்சியில் இருந்த போது அப்போது உயர் கல்வி துறை அமைச்சராக இருந்த பொன்முடி முயற்சி செய்து கொண்டு வர முடியவில்லை. நாங்கள் கொண்டு வந்தோம் இதனை அவரால் பொறுத்து கொள்ள முடியவில்லை. பல்கலை கழகத்திற்கு என்ன வசதி இருக்கிறது என பொன்முடி. இந்த பல்கலை கழகம் துவக்க கடந்த 25-02-2021 அன்று கவர்னர் ஒப்புதல் அளித்தார். 26-02-2021 அன்று நோட்டிபிகேஷனில் போட்டு அன்றைய துணை வேந்தர் நியமித்தோம். அன்று மாலை தேர்தல் ஆணையம் தேர்தல் தேதி அறிவித்ததால் தொடர்ந்து பணிகள் நடைபெற்ற வில்லை தேர்தல் நன்னடத்தை விதி அமலுக்கு வந்தால். இந்த பல்கலைக்கழகம் கட்ட 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய முடியாத அரசு 200 கோடி ரூபாய்செலவு செய்து மதுரையில் நூலகம் கட்டடத்தில் உள்ளதா. நூலகம் கட்டுவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஏன் அது ஸ்டாலின் அப்பா பெயர் வைப்பதனாலா? பல்கலைக்கழகம் ஜெயலலிதா பெயரில் இருப்பதால் நிதி ஒதுக்கீடு செய்ய தயங்குகிறதா. அப்படியானால் அவர்கள் அம்பேத்கர் பெயரில் இந்த பல்கலைகழகத்தை துவக்கி நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஒட்டு போட்ட விழுப்புரம் மக்களுக்கு மிகபெரிய நம்பிக்கை துரோகம் செய்து விட்டார் பொன்முடி. இந்த பல்கலைகழகத்தில் இந்த நகருக்கு தானே பெருமை. தமிழகத்தில் கலை அறிவியல் கல்லூரி இல்லாத மாவட்டத்தில் கலை அறிவியல் கல்லூரி துவங்கப்படும். அரிசிவாங்கும் குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றனர். இதுவரை அவர்கள் செய்தார்களா. திமுகவில் தலைவன் முதல் தொண்டன் வரை ஊருக்கு ஊர் ஒரு பேச்சு இது தான் திமுக ஆட்சி. இவ்வாறு அவர் பேசினார்.

# விக்கிரவாண்டியில் கார்கில் நினைவு தினம் அனுசரிப்பு



விக்கிரவாண்டி,ஜூலை 27 2021: விக்கிரவாண்டியில் கார்கில் நினைவு தூணில் 22 ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. விக்கிரவாண்டி அங்காளம்மன் கோவில் அருகில் உள்ள கார்கில் நினைவு தூணில் நடந்த நிகழ்ச்சிக்கு குழு நிர்வாகி முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகி அசோக்குமார் , ஞானம் ஆகியோர் முன்னிலை வகித்தார். விக்கிரவாண்டி பேரூராட்சி முன்னாள் சேர்மன் குமாரசாமி, போலீஸ் ஏட்டு விருத்திகா ஆகியோர் மெழுகுவர்த்தி ஏற்றி மலரஞ்சலி தூவி அஞ்சலி செலுத்தினார். நினைவு தூண் குழு நிர்வாகிகள் கார்த்திக், புஷ்பராஜ், சதீஷ்குமார், பெருமாள் ராஜா மற்றும் பொதுமக்கள் வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

# விக்கிரவாண்டியில் மாற்றுத்திறனாளிகள் சங்க பெயர் பலகை திறப்பு விழா



விக்கிரவாண்டி, ஜூலை 27.2021: விக்கிரவாண்டி அடுத்த முண்டியம்பாக்கத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைக்கான நல சங்க பெயர் பலகை திறப்பு விழா நடந்தது.

விழாவிற்கு ஒன்றிய குழு உறுப்பினர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாநில குழு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் சங்க கொடியை ஏற்றி வைத்தார் . மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி சங்க பெயர் பலகையை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார்.

விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் கலியமூர்த்தி, மாவட்ட பொருளாளர் உமா, நிர்வாகிகள் அபிராமி, ஆனந்தி, பக்கிரி, ராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி அடுத்த முண்டியம்பாக்கத்தில் மாற்றுத்திறனாளிகள் சங்க பெயர் பலகையை மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்.

# கொரோனா தடுப்பூசிகளை வீட்டிற்கு கொண்டு சென்ற செவிலியர் பணியிடை நீக்கம்



கரூர், ஜூலை 27 2021: கரூரில் 100க்கும் மேற்பட்ட கொரோனா தடுப்பூசிகளை வீட்டிற்கு கொண்டு சென்ற செவிலியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே தடுப்பூசி போடும் பணியும் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. பல இடங்களில் தடுப்பூசி தட்டுப்பாடு நிலவி வருவதால் பொதுமக்கள் தடுப்பூசி கிடைக்காமல் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இதனிடையே கரூர் நகராட்சியில் உள்ள கஸ்தூரிபாய் அரசு தாய் சேய் நல விடுதியில் செவிலியராக பணியாற்றி வரும் தனலட்சுமி என்பவர் மருத்துவமனையில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கோவிஷீல்டு கொரோனா தடுப்பூசிகளை தனது வீட்டிற்கு கொண்டு சென்றுள்ளார். மேலும் அந்த தடுப்பூசிகளை பிறருக்கு செலுத்தி பணம் வாங்கியதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து தகவலறிந்த வேடசந்தூர் வட்டார மருத்துவ அலுவலர் மகேஸ்வரி தனலட்சுமியின் வீட்டில் சோதனை செய்ததோடு அங்கிருந்த தடுப்பூசிகளை பறிமுதல் செய்துள்ளார். மேலும் கரூர் நகராட்சி ஆணையருக்கும் இது குறித்து தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் தனலட்சுமியை பணி இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார். மேலும் தனலட்சுமி மீது காவல் நிலையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலக ஐவிஎஃப் தினத்தையொட்டி இந்தியாவிலேயே முதன்முறையாக 85000 வெற்றிகரமான ஐவிஎஃப் கருத்தரிப்பு சாதனையை அடைந்த இந்திரா ஐவிஎஃப்

சென்னை 27 ஜூலை 2021: இந்தியாவின் மிகப்பெரிய ஃபெர்டிலிட்டி சிகிச்சை நிறுவனமான இந்திரா ஐவிஎஃப் ஆனது 85,000 வெற்றிகரமான ஐவிஎஃப் கருத்தரிப்பை நிறைவு செய்துள்ளது. முதன்முறையாக இந்தியாவில் இப்படியான மைல்கல்லை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. மருத்துவ வல்லுநர்கள், கருவியல் வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப புலமை ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட ஒற்றை நிறுவனமானது இந்தச் சாதனையை உலக ஐவிஎஃப் தினத்திற்கு முன்னதாக அறிவித்து பெருமைப்படுத்தியுள்ளது. இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 25 தேதி கொண்டாடப்படுகிறது. அறிவாற்றல் மிக்க முன்னணியில் சேவையாற்றும் இந்திரா ஐவிஎஃப் ஆனது குழந்தையின்மையால் ஏற்படும் மன கசப்புகளை மக்கள் மத்தியில் அகற்ற அயராது உழைத்துவருகிறது. 700 க்கும் மேற்பட்ட நகரங்களில் 2100 க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு முகாம்களை இந்த அமைப்பு நடத்தியுள்ளது. இதன் மூலம் ஃபெர்ட்டிலிட்டி குறித்த அச்சங்களையும், சந்தேகங்களையும் கலைந்து மக்கள் மத்தியில் ஆரோக்கிய அணுகுமுறைகளை மேற்கொண்டுவருகிறது. இந்தியாவில், கருத்தரிக்க இயலாமைக்கான பொறுப்பு பெண்கள் மீது அதிகமாக வைக்கப்படுகிறது. அதே நேரத்தில் கருவுறாமை பெண் மற்றும் ஆண் இருவரிடமும் கண்டறியப்படலாம் என்று ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. இதனால், பலர் குழந்தையைப் பெறுவதற்கு அறிவியலற்ற முறைகளையும் நாடுகிறார்கள்.

இந்திரா ஐவிஎஃப் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனர் டாக்டர் க்ஷிதிஸ் முர்டியா பேசும்போது, "எங்களைத் தேடி வருபவர்களுக்கு எங்களால் வழங்க முடிந்த சாதகமான தீர்வுகளை காண முடிவதானது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நாங்கள் தொடங்கியபோது, சமூகத்தில் கருவுறாமை ஏற்படுத்தும் தாக்கத்தை மாற்ற விரும்பினோம், மேலும் கருவுறாமைக்கான மருத்துவ தீர்வுகளை அதிகமான மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மைல்கல் எட்டுவதென்பது, தொற்றுநோய் காலக்கட்டத்தை எதிர்கொண்டாலும் கூட, சிகிச்சையின் போது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறோம். இதுவே, எங்கள் மீதான மக்களின் நம்பிக்கையே ஒரு சான்று" என்றார். மேலும் கூறும்போது, "உலக ஐவிஎஃப் தினமான ஜூலை 25ஆம் தேதியானது வரலாற்றின் மிக முக்கியமான தினமாகப் பார்க்கப்படுகிறது. ஏனெனில், முதல் ஐவிஎஃப் குழந்தை 43 ஆண்டுகளுக்கு முன்பு 1978 இல் இந்த தேதியில் பிறந்தது. மிக நீண்ட தூர பயணத்தைக் கடந்து வந்துவிட்டோம். செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னியக்கவாக்கம் போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஐவிஎஃப் சிகிச்சையின் வெற்றியை பெரிதளவில் கொண்டுசெல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பெரிய காரணத்தில் எங்கள் சிறிய பங்காக சேவையாற்றிவருவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் பெற்றோராக கனவு காண்பவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து உதவுகிறோம், " என்று முடித்தார்.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# திண்டிவனம் அருகே வீட்டின் பின் பக்க கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற மர்ம நபர்கள் கத்திமுனையில் மூவரை கட்டிப்போட்டு 49 சவரன் நகை, 2 1/2 கிலோ வெள்ளி பொருட்கள் கொள்ளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா நேரில் விசாரணை

திண்டிவனம், ஜூலை 27 2021: திண்டிவனம் அருகே வீட்டின் பின்பக்க கதவை உடைத்து கத்தி முனையில் 49 சவரன் தங்க நகைகள் மற்றும் 2 கிலோ வெள்ளி பொருட்கள் 3 செல்போன்கள் உள்ளிட்ட பொருட்கள் கொள்ளை. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா நேரில் விசாரணை.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த வெளியனூர் பகுதியை சேர்ந்தவர் வேணு. இவர் அப்பகுதியில் மளிகை கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று இரவு வழக்கம் போல் தனது மனைவி முத்துலட்சுமி மகள் விஜயகுமாரி ஆகியோருடன் உணவு அருந்திவிட்டு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது நள்ளிரவு 12.30 மணி அளவில் வீட்டின் பின்பக்க கதவை காலால் எட்டி உதைத்து உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற மர்ம நபர்கள் 4 பேர் கத்தி மற்றும் இரும்பு பைப் ஆகியவற்றுடன் உள்ளே நுழைந்து வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மூன்று பேரையும் கட்டிப் போட்டு விட்டு தாலி மற்றும் பீரோவில் இருந்த தங்க நகைகள் உள்ளிட்ட 49 சவரன் நகைகள் மற்றும் இரண்டரை கிலோ வெள்ளி பொருட்கள், 3 விலை உயர்ந்த செல்போன்கள் ஆகியவற்றை கொள்ளையடித்து தப்பி சென்றனர். சுமார் ஒரு மணி நேரமாக சாவகாசமாக இந்த கொள்ளை சம்பவத்தில் மர்ம நபர்கள் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது. இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீ நாதா, திண்டிவனம் துணை காவல் கண்காணிப்பாளர் கணேசன் மற்றும் போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று விசாரணை





மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மோப்பநாய் சாய்னா வரவழைக்கப்பட்டு கைரேகை மற்றும் தடயங்களை சேகரித்து வருகின்றனர். சாய்னா சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடிச்சென்று சவுக்குத் தோப்பு அருகே நின்றது. வேணுவின்

பெண்ணுக்கு அடுத்த மாதம் திருமணம் நடக்க இருந்த நிலையில் இந்த கொள்ளைச் சம்பவம் நடந்து இருப்பது அவரது குடும்பத்தினரிடையே பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மயிலம் காவல்நிலையத்திற்குட்பபட்ட ஜக்காம்பேட்டையில் சில தினங்களுக்கு முன்பு அடுத்தடுத்த இரண்டு வீடுகளில் 18 சவரன் நகை மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட மர்ம நபர்களை கண்டுப் பிடிப்பதில் போலீசார் திணறி வரும் நிலையில் இந்தப் பகுதியில் மற்றுமொரு கொள்ளை சம்பவம் நடந்திருப்பது போலீசாருக்கு பெரும் சவாலாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இது போன்று குற்றச்சம்பவங்களைத் தடுப்பதற்காக போலீசார் இரவு ரோந்துப்பணியில் தவறாமல் ஈடுபடவேண்டும் என்று இங்குள்ள பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை பகிர்வதற்காக தொடங்கப்பட்ட ஐ-ஸ்டெம் இணையதளம் 2வது கட்டத்தில் நுழைகிறது: 5 ஆண்டு நீட்டிப்புக்கு அனுமதி

புதுதில்லி, ஜூலை 27, 2021: ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை பகிர்வதற்காக தொடங்கப்பட்ட ஐ-ஸ்டெம் இணையதளம் 2வது கட்டத்தில் நுழைகிறது. இதற்கு 5 ஆண்டு நீட்டிப்பை, மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் வழங்கியுளளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை பகிர்ந்து கொள்வதற்காக ஐ-ஸ்டெம், என்ற தேசிய இணையதளம் கடந்த 2020 ஜனவரியில், பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது. ஐ-ஸ்டெம் என்ற இந்த இணையதளம் பிரதமரின் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க ஆலோசனை கவுன்சில் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தின் முயற்சியால் தொடங்கப்பட்டது. ஐ-ஸ்டெம் திட்டத்துக்கு, 2026ம் ஆண்டு வரை 5 ஆண்டு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இத்திட்டம் கூடுதல் அம்சங்களுடன் 2வது கட்டத்துக்கு நுழைகிறது. ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி வளங்களை ஒருங்கிணைத்து நாட்டின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழலை வலுப்படுத்துவதுதான் ஐ-ஸ்டெம் திட்டத்தின் இலக்கு. இது நாட்டின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு, ஆராய்ச்சியாளர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் நிதியை ஐ-ஸ்டெம் இணையதளம் மூலம் வழங்குகிறது. இரண்டாவது திட்டத்தின் கீழ், இந்த ஐ-ஸ்டெம் இணையதளம், டிஜிட்டல் அட்டவணை மூலம் பட்டியலிடப்பட்ட உள்நாட்டு தொழில்நுட்ப தயாரிப்புகளை வழங்கும். இந்த இணையதளம், பல்வேறு நகர அறிவு மற்றும் கண்டுபிடிப்புக் தொகுப்புகளுக்கான தளத்தையும் வழங்கும்.

### குழந்தைகளுக்கான பிரதமரின் நலநிதிக்கு விண்ணப்பிப்பதற்கான இணையதளம்: பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தொடக்கம்

